## தமிழ்நாடு அரசு



# தமிழ்நாடு அங்கக வேளாண்மைக் கொள்கை 2023

## வேளாண்மை-உழவர் நலத்துறை

# தமிழ்நாடு
# அங்கக வேளாண்மைக்
# கொள்கை 2023





**எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்**
**வேளாண்மை – உழவர் நலத்துறை**
**அமைச்சர்**

தலைமைச் செயலகம்,
சென்னை-600 009

நாள் 10.03.2023

நிலம், நீர் போன்ற இயற்கை வளங்களை பாதுகாத்து, தமிழ்நாட்டு மக்களுக்கு நஞ்சற்ற உணவுப்பொருட்கள் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக வேளாண்மைக்கு என்று தனி நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்து, இயற்கை வேளாண்மை சார்ந்த பணிகளுக்கு இவ்வரசு அதிக முக்கியத்துவம் தந்து வருகிறது. இயற்கை இடுபொருட்கள் உற்பத்தியை ஊக்குவித்தல், இயற்கை முறையில் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு சாகுபடி மானியம், பரிசு என பல்வேறு திட்டங்கள் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இயற்கை வேளாண்மையில் உள்ள சவால்கள், இயற்கை வேளாண்மையின் முக்கியத்துவத்தை நன்கு ஆராய்ந்து, இயற்கை வேளாண்மைக்கான உத்திகளை தமிழ்நாட்டு விவசாயிகளிடையே பிரபலப்படுத்தி, நிலங்களில் இரசாயன இடுபொருட்களின் பயன்பாட்டினை படிப்படியாக குறைத்து, இயற்கை இடுபொருட்களை அதிகளவில் பயன்படுத்தி, மண்ணையும் நீரையும் பாதுகாத்து மண் வளத்தை மேம்படுத்தி, மனிதன் மட்டுமல்லாது கால்நடைகளின் ஆரோக்கியத்திற்கு நஞ்சற்ற உணவை உற்பத்தி செய்வதற்கும், இயற்கை முறையில் உற்பத்தியாகும் வேளாண் விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கவும், பல்வேறு உத்திகளை கண்டறிந்து, தமிழ்நாடு அங்கக வேளாண்மை கொள்கை 2023 யை தமிழ்நாடு அரசு வகுத்துள்ளது. இது இயற்கை வேளாண் வரலாற்றில் மிக முக்கியமானதாகும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் வெற்றி நடைபோடும் தமிழ்நாடு அரசு வகுத்துள்ள இந்த அங்கக வேளாண்மை கொள்கையினை நடைமுறைப்படுத்திட அனைத்து வகையிலான உதவிகளையும் இந்த அரசு விவசாயிகளுக்கு வழங்கும்.

விளைநிலம் செழிக்க வேண்டும், விவசாயிகளின் வாழ்வு மலர வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள இந்த அங்கக வேளாண்மைக் கொள்கையானது தமிழ்நாட்டு மக்களுக்கு ஆரோக்கியமான உணவை வழங்குவதில் பெரும்பங்காற்றும் என முழுமையாக நம்புகிறேன்.

அன்புடன்,

10/3/23

(எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்)



**V. IRAI ANBU**
CHIEF SECRETARY

GOVERNMENT OF TAMIL NADU
TRUTH ALONE TRIUMPHS

SECRETARIAT
CHENNAI-600 009

## MESSAGE

Agriculture has a long and honoured history that is much longer than the history of cities and of the factories of the industrialised world. Agriculture, being the main source of livelihood for a long time, had its reverberations in every walk of life. It is the first profession men ever practised.

Thiruvalluvar eulogized agriculture as the greatest profession by saying, 'They live, the plough for life who steer; All others worship in the rear'.

Shakespeare compares governance of the State with tending of the garden.

Thomas Jefferson hailed, 'Agriculture is the wisest pursuit'.

Dr. Johnson called agriculture, the noblest science.

Agriculture helped in domesticating the wild crops as well as the wild animals.

When agriculture became commercial and animal husbandry became factory farming, they had their own repercussions in the health of mankind. Therefore, we have champions who advocate natural farming and organic farming

Phone: 044-25671555 Fax: 044-25672304 e-mail: cs@tn.gov.in

in order to prevent pollution and to ensure healthy agricultural products.

Tamil Nadu has a rich history of organic farming as it is evident from the ancient literature of the state. The government is committed to reinvigorate the organic farming in areas, where it is possible and in crops which are known for organic system of cultivation. The Agriculture Department has brought out a policy on organic farming and it is heartening to know that it is comprehensive and flexible.

It has suggested the methodologies by which we can improve the extent of organic farming and ensure reasonable returns for the farmers.

I am sure, this Policy would help in expanding the area in organic farming, without affecting the overall productivity and income of the farmers.

(V. IRAI ANBU)

# உள்ளடக்கம்


| | | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | அங்கக வேளாண்மை குறித்த முன்னுரை | 7 |
| 2 | இயற்கை வேளாண்மை, அங்கக வேளாண்மை-வேறுபாடு | 10 |
| 3 | வாய்ப்புகள்-உசிதங்கள் | 10 |
| 4 | அங்கக வேளாண்மையின் தற்போதைய நிலை | 10-12 |
| 5 | அங்கக வேளாண்மையின் நன்மைகள் | 12 |
| 6 | வேளாண்மையில் உள்ள சவால்கள் | 14 |
| 7 | அங்கக வேளாண் கொள்கைக்கான தேவை | 14 |
| 8 | நோக்கங்கள் | 15 |
| 9 | கொள்கை உத்திகள் | 16-27 |
| 10 | குழுக்களை அமைத்தல் | 29 |
| 11 | நிதிச்சுமை / பொறுப்பு | 29 |
| 12 | அங்கக வேளாண்மைக் கொள்கைக்கான காலவரம்பு | 29 |
| | இணைப்பு | 30 |



## 1. அங்கக வேளாண்மை குறித்த முன்னுரை

1.1 உலக இலக்கியக்கங்களில் எந்த மனிதரையும் விட உழவருக்கே மிகச்சிறந்த இடம் அளிக்கப்பட்டுள்ளது. ஹீப்ரு, கிரேக்கம் மற்றும் இலத்தீன் மொழிகளின் சிறந்த கவிஞர்கள், தத்துவ அறிஞர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் உழவர்களை மிக உயர்வாகப் பாராட்டுகின்றனர். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு துவங்கிய ஐரோப்பிய இலக்கியத்தில் ஹோமரும் ஹெசியோடும் உழவர்களையும் அவர்களது வாழ்க்கை முறையையும் வெகுவாகப் பாராட்டிக் கொண்டாடியுள்ளனர். கலாச்சாரப் பண்பாடுகளில் பல்வேறு தலைமுறையினரால் போற்றப்பட்ட இலக்கியப் படைப்புகளில் மிகவும் செல்வாக்குமிக்கதும், தமிழர்களின் பெருமையை பறைசாற்றுவதுமான திருக்குறளிலும் 2000 ஆண்டுகளுக்கு முன்பே வேளாண்மையின் முக்கியத்துவம் வலியுறுத்தி கூறப்பட்டுள்ளது.

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை."

வளர்ச்சி, மேம்பாடு என்ற பெயரில் வேளாண் தொழிலிலிருந்து எவ்வளவு தூரம் விலகியிருந்தாலும், வாழ்வாதாரத்திற்காக வேளாண்மையை நோக்கித் திரும்புவோம் என்ற உண்மையைத் திருக்குறள் வலியுறுத்துகிறது. அய்யன் திருவள்ளுவர் வேளாண்மையின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டியதுடன் அல்லாமல், அங்கக வேளாண்மையின் முக்கியத்துவத்தையும் எடுத்தியம்புகின்றார்;

"தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்"

ஒரு பலம் புழுதி கால்பலம் ஆகும்படி உழுது காயவிட்டால், ஒரு பிடி எரு கூட இடாமலேயே அந்நிலத்தில் பயிர்செழித்து விளையும். இதன் மூலம், இயற்கை வேளாண்மையின் முக்கியத்துவத்தையும், பயன்களையும் முன்னிலைப் படுத்தியுள்ளார்.

## 1.2 பண்டைய இந்திய வேளாண்மை:

பராசர முனிவர் கி.மு. 400-இல் வேளாண் பயிர் சாகுபடி குறித்து எழுதியுள்ளார். அதில் வேளாண்மை நடைமுறைகள் அனைத்தும் வரிசைப்படுத்தப்பட்டு கூறப்படுகின்றன. இவ்வரிசையே வேளாண்மையை அறிமுகம் செய்யும் விதமான புத்தகங்களில் இன்றும் பின்பற்றப்படுகின்றன. கி.மு.200-இல் தொல்காப்பியரால் “தொல்காப்பியம்” எனும் இலக்கண நூல் எழுதப்பட்டது. அதில் வேளாண்மையின் அம்சங்கள் குறித்த விளக்கங்களில், வேளாண்மைநிலங்கள் நான்கு வகைகளாக, அதாவது- குறிஞ்சி (மலையும் மலை சார்ந்த இடமும்), முல்லை (காடும் காடு சார்ந்த இடமும்), மருதம் (வயலும் வயல் சார்ந்த இடமும்), நெய்தல் (கடலும் கடல் சார்ந்த இடமும்) எனவும், பருவகாலங்களை இளவேனில், முதுவேனில், கார், குளிர், முன்பனி, பின்பனி, என்று ஆறு பிரிவுகளாக வகைப்படுத்தியும் காட்டப்பட்டுள்ளது.

## 1.3 காலவரிசை:

வேளாண்மை குறைந்தது 10,000 ஆண்டுகளுக்கு முன்பே மேம்பட்டிருந்து, சாகுபடியின் தொடக்ககாலத்திலிருந்து இன்று வரை இதில் குறிப்பிடத்தக்க வளர்ச்சிகள் ஏற்பட்டுள்ளன. வடக்கு மற்றும் தெற்கு சீனா, ஆப்பிரிக்காவின் சஹேல், நியூ கினியா மற்றும் அமெரிக்காவின் பல பகுதிகளில் வேளாண்மையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டது. நீர்ப்பாசனம், பயிர் சுழற்சி முறை, உரங்கள், பூச்சிக்கொல்லிகள் போன்ற வேளாண்மை நடைமுறைகள் நீண்ட காலத்திற்கு முன்பே உருவாக்கப்பட்டிருந்தாலும் அவை கடந்த நூற்றாண்டில் பெரும் முன்னேற்றத்தை அடைந்துள்ளன.

## 1.4 முக்கிய திருப்புமுனைகள்:

1800 ஆம் ஆண்டில், இரசாயன உரங்களின் பயன்பாடு தொடங்கியது. மேலும் 1900 ஆம் ஆண்டில், கால்நடைகள், கோழி, மீன் மற்றும் பயிர்களின் உற்பத்தியை தொழில்மயமாக மேற்கொள்ளும் நவீன விவசாயத்தின் ஒரு வடிவமான தொழில்சார் வேளாண்மை துவங்கியது. தாவர வளர்ச்சியில் நைட்ரஜன் மற்றும் பாஸ்பரஸ் முக்கிய காரணிகள் எனக் கண்டறியப்பட்டதால், செயற்கை உரங்கள் உற்பத்திக்கு வழிவகுத்து, விளைச்சலை அதிகரிக்கும் விவசாய முறைகளுக்கு வழிவகை செய்தது. 1939 ஆம் ஆண்டில் பால் முல்லரால் கண்டுபிடிக்கப்பட்ட DDT(டைகுளோரோ-டைபெனைல்-ட்ரைக்ளோரோஈத்தேன்), அதன் செயல்திறனுக்காக உலகில் மிகவும் பரவலாகப் பயன்படுத்தப்படும்

பூச்சிக்கொல்லியாக மாறியது. 1940 ஆம் ஆண்டுகளில் உற்பத்தியாளர்கள் அதிக அளவு செயற்கை பூச்சிக்கொல்லிகளை உற்பத்தி செய்யத் தொடங்கினர். அவற்றின் பயன்பாடு 1940 மற்றும் 1950ஆம் ஆண்டுகளில் "பூச்சிக்கொல்லிகளின் சகாப்தத்திற்கான" தொடக்கமாக இருந்தது.

## 1.5 பசுமைப் புரட்சியும் அதன் தாக்கமும் ”

1940 மற்றும் 1960 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில், பசுமைப் புரட்சி விவசாயத்தை மாற்றியமைத்தது. சில பகுதிகளில் வேளாண் உற்பத்தியினை குறிப்பிடத்தக்க அளவு மேம்படுத்த இப்பசுமைபுரட்சி வழிவகுத்து, பெரும் சமூக, சூழலியல் தாக்கங்களை ஏற்படுத்தியது. தீவிர சாகுபடியினால், விளைபொருட்களில் பூச்சிக்கொல்லிகளின் எச்சங்கள் (Pesticide Residues) காணப்பட்டன. எஞ்சிய இரசாயனங்கள் உணவுச் சங்கிலியில் ஊடுருவி, அவை உயிரி உருப்பெருக்கமடைந்து (Biomagnification), சுற்றுச்சூழலை மாசுபடுத்தியதோடு மனிதகுலத்திற்கும், விலங்குகளுக்கும் சுகாதார சீர்கேடுகள் ஏற்பட வழிவகுத்தன. காலப்போக்கில், பலன் உயர்வு குறைதல் விதியின் விளைவுகள் (Law of Diminishing Marginal Returns) வேளாண் தொழிலில் உணரப்பட்டன. செயற்கை நைட்ரஜன் உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லிகளுக்கு மாறிய நிலைக்கு மாற்றாக, 1900 ஆம் ஆண்டில், இயற்கை வேளாண்மை ஒரு நீடித்த நிலையான வேளாண்மை முறை என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பல நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் அதனை மேம்படுத்துவதில் உலக அளவில் ஈடுபட்டனர். 1972ஆம் ஆண்டில், சுற்றுச்சூழல் மீது அக்கறை கொண்ட விவசாயிகளைக் கொண்ட பல்வேறு அமைப்புகள் ஒன்றிணைந்து, இயற்கை வேளாண்மை இயக்கங்களின் சர்வதேச கூட்டமைப்பை (International Federation of Organic Agriculture Movements) உருவாக்கி, சுற்றுச்சூழல் மீதான விழிப்புணர்வை ஏற்படுத்தின, இது அங்கக வேளாண்மைக்கான தேவையை ஏற்படுத்தி, அங்கக வேளாண்மைக்கு மாறுவதை ஊக்குவித்தது.

## 2. இயற்கை வேளாண்மை, அங்கக வேளாண்மை- வேறுபாடு

அங்கக வேளாண்மை, இயற்கை வேளாண்மை என்பன இரு வேறு வேளாண் சூழலியல் நடைமுறைகளாகும். இயற்கை வேளாண்மை, அங்கக வேளாண்மை என்ற பெயர்கள் இந்தியாவில் விவசாயிகளாலும் பிறராலும் சில நேரங்களில் ஒன்றுக்கொன்று மாற்றாகப் பயன்படுத்தப்படுகின்றன. இயற்கை வேளாண்மையில், இயற்கை இடுபொருட்களை வெளியில் இருந்து வாங்குவதை விட, பண்ணையிலேயோ அல்லது பண்ணைக்கு அருகிலேயோ தயாரிக்கப்பட்ட இடுபொருட்களின் பயன்பாடு வலியுறுத்தப்படுகிறது. ஆனால் அங்கக வேளாண்மையில் பண்ணைக்கு வெளியில் இருந்து வாங்கப்பட்ட உயிர் உரங்கள் (Biofertilizers) போன்ற இடுபொருட்களையும் பயன்படுத்துகின்றனர்.

## 3. வாய்ப்புகள்-உசிதங்கள்

உலகின் அங்கக உணவுச் சந்தை விரைவாக வளர்ந்து வருவதுடன், அங்கக விளைபொருட்களுக்கான உலகளாவிய தேவை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. ஏழுவகையான வேளாண் சுற்றுச்சூழல் மண்டலங்களைக் கொண்டு பல்வேறு பயிர்கள், இரகங்களைப் பயிரிடுவதற்கு ஏற்றதாக தமிழ்நாடு இருப்பதால் இந்தியா உள்ளிட்ட உலகின் பெரிய அளவிலான அங்கக சந்தையின் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய வாய்ப்பு உள்ளது. மேற்கு மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகள், மானாவாரி விவசாயப் பகுதிகள் ஆகியவை அங்கக முறையில் சாகுபடி மேற்கொள்வதற்கான வாய்ப்புகளையும் சாதகத்தையும் அளிக்கின்றன.

## 4. அங்கக வேளாண்மையின் தற்போதைய நிலை

### அ. உலகளாவிய நிலை

உலக அளவில், 1.5 சதவீத அளவிலான வேளாண் நிலங்களில் (72.3 மி.எக்டர்) அங்கக வேளாண் முறையில் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. மொத்த வேளாண் நிலத்தில் அதிக அங்கக சாகுபடி பரப்புகள் கொண்ட நாடுகள், ஆஸ்திரேலியா (35.7 மி,எக்டர்), அர்ஜென்டினா (3.7 மி.எக்டர்) மற்றும் ஸ்பெயின் (2.4 மி.எக்டர்). உலக அளவில், 2019 ஆம் ஆண்டில் அங்ககப் பரப்பு 1.1 மில்லியன் எக்டர் (1.6%) அதிகரித்துள்ளது. பல நாடுகளில் அங்கக வேளாண் சாகுபடிப்பகுதிகள் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளன. இந்தியா 0.36 மி.எக்டர் அதிகரிப்பைப் பதிவுசெய்தது, அதைத் தொடர்ந்து கஜகஸ்தான், 2019 ஐ விட 0.1 மி.எக்டர் அதிகமாக பதிவு செய்துள்ளது.

2019 ஆம் ஆண்டில் உலகில் 3.1 மில்லியன் (தோராயமாக) அங்கக சாகுபடி உற்பத்தியாளர்கள் இருந்தனர். உலகின் அங்கக சாகுபடி உற்பத்தியாளர்களில் ஐம்பத்தொரு சதவீதம் பேர்ஆசியாவில் உள்ளனர், அதைத் தொடர்ந்து, ஆப்பிரிக்கா (27%), ஐரோப்பா (14%) மற்றும் லத்தீன் அமெரிக்கா (7%) ஆகியவை உள்ளன. அதிக அங்கக உற்பத்தியாளர்களைக் கொண்ட நாடுகள், இந்தியா (13,66,226) மற்றும் உகாண்டா (2,10,353) ஆகும்.

அங்கக உற்பத்தி பொருட்களுக்கான மிகப்பெரிய சந்தை அமெரிக்கா (உலக சந்தையில் 42%). அதைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியமும் (39%) சீனாவும் (8.0%) உள்ளன. அதிக அங்கக சந்தைக்கான பங்கைக் கொண்ட நாடுகள் டென்மார்க் (12.1%), சுவிட்சர்லாந்து (10.4%), ஆஸ்திரியா (9.3%) ஆகும்.[1]

## ஆ. இந்திய அளவிலான நிலை

அங்கக சான்றளிப்பு செயல்முறையின் கீழ் (சான்றளிக்கப்பட்ட) 2.66 மி.எக்டர் (வனப்பகுதி சாகுபடி தவிர்த்து) மொத்த பரப்பளவுடன் இந்தியா ஐந்தாவது இடத்தைப் பிடித்துள்ளது. மொத்த அங்கக சாகுபடி பரப்பில் 1.49 மி.எக்டர் முழுமையாக சான்றளிக்கப்பட்ட நிலையிலும் 1.17 மி.எக்டர் அங்கக சாகுபடிக்கு மாறுதலின் கீழும் உள்ளன. மாநில அளவில், மத்தியப்பிரதேசம் அங்கக சான்றிதழின்கீழ் அதிக பரப்பளவைக் கொண்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மஹாராஷ்டிரா, ராஜஸ்தான், குஜராத், கர்நாடகா ஆகிய மாநிலங்கள் உள்ளன. இந்தியா சுமார் 3.48 மில்லியன் மெட்ரிக் டன் (2020-2021) சான்றளிக்கப்பட்ட அங்ககப் பொருட்களை உற்பத்தி செய்துள்ளது. அவற்றில், எண்ணெய்வித்துக்கள், தானியங்கள், சிறுதானியங்கள், பருத்தி, பயறுவகைகள், வாசனை மற்றும் மூலிகைத் தாவரங்கள் மூலம் 3.48 மில்லியன் மெட்ரிக் டன் (2020-2021) சான்றளிக்கப்பட்ட அங்கக பொருட்களை உற்பத்தி செய்தது. ஏற்றுமதிமதிப்பில் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் முன்னிலையிலும் (45.87%), தொடர்ந்து எண்ணெய்வித்துக்களும் (13.25%) தானியங்களும் (7.61%) உள்ளன.[2]

*[1]* (ஆதாரம்: 22nd edition of FIBL Organic World of Agriculture)

*[2]* (ஆதாரம்: Agricultural and Processed Food Products Export Development Authority (APEDA))

## இ. தமிழ்நாட்டில் அங்கக வேளாண் சாகுபடியின் நிலை

31,629 எக்டர் அங்கக வேளாண் பரப்பினைக் கொண்டு தமிழ்நாடு தேசிய அளவில் 14வது இடத்தில் உள்ளது. இதில் 14,086 எக்டர் அங்கக சான்றளிக்கப்பட்ட பகுதியும், 17,542 எக்டர் மாறுதலின் கீழ் உள்ள பகுதியும் அடங்கியுள்ளன. மொத்த பரப்பளவைப் பொருத்த வரையில், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்கள் முதலாம் இரண்டாம் இடங்களைப் பிடித்துள்ளன. அங்கக விளைபொருட்கள் மற்றும் காடுகளிலிருந்து சேகரிக்கப்படும் பொருட்கள் உள்ளிட்ட 24,826 மெட்ரிக் டன்கள் அங்கக விளைபொருள் உற்பத்தியுடன் தமிழ்நாடு 11வது இடத்தில் உள்ளது. 4,223 மெட்ரிக் டன் அங்ககப் பொருட்களை ஏற்றுமதி செய்து, 2020-2021 ஆம் ஆண்டில் ரூ.108 கோடி வருமானம் ஈட்டியது.

## 5. அங்கக வேளாண்மையின் நன்மைகள்

I. மண்ணின் கட்டமைப்பையும், அதன் நயத்யையும் மேம்படுத்துவதன் வாயிலாக மண் வளத்தை உயர்த்திப் பாதுகாக்கிறது.

II. பண்ணையில் உள்ள வளங்களை மட்டுமே பயன்படுத்துதல், பண்ணைக்கு வெளியே உள்ள வளங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கிறது / குறைக்கிறது.

III. இயற்கை சூழலியல் அமைப்புடன் மனிதன் ஒருமித்து வாழ உதவுகிறது

IV. பயிர் உற்பத்திக்கும் கால்நடை வளர்ப்பிற்கும் இடையே இணக்கமான சமநிலையை உருவாக்குகிறது

V. இது காலநிலை மாற்றத் திற்கேற்ற சாகுபடி முறையாகும்.

VI. விவசாயத்தில் தற்சார்பினையும் நிலைத் தன்மையையும் ஏற்படுத்துகிறது.

VII. நுகர்வோருக்கு பாதுகாப்பான உணவு கிடைக்கச் செய்கிறது



## 6. வேளாண்மையில் உள்ள சவால்கள்

I. வேளாண் இரசாயனங்களைத் தொடர்ந்து பயன்படுத்தி சாகுபடி செய்வதால் மண்ணின் வளம் குறைகின்றது.

II. வேளாண் இரசாயனங்களின் காரணமாக, நிலம், நீர், காற்று போன்றவற்றில் சுற்றுச்சூழல் மாசுபாடு அதிகரிக்கிறது.

III. புதிய பூச்சிகள், நோய்களின் தோற்றம், பயிர் இழப்பிற்கு வழிவகுக்கிறது.

IV. பயிர் சாகுபடிக்கான செலவு அதிகரிப்பதால் வருமானம் குறைந்து, இறுதியில் விவசாயிகள் கடன் சுழற்சியில் தள்ளப்படுகின்றனர்.

V. பூச்சிக்கொல்லி எச்சங்களின் அளவு அதிகரிப்பதால், வேளாண் விளைபொருட்களின் ஏற்றுமதி வாய்ப்புகள் குறைகின்றன.

## 7. அங்கக வேளாண் கொள்கைக்கான தேவை

உலக அளவில் காணப்படும் பல்வேறு உடல்நலப் பிரச்சனைகளுக்கு முக்கிய காரணம் வேளாண் இரசாயனங்களின் எச்சங்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளது. பூச்சிக் கொல்லிகளின் எச்சம், உணவுச் சங்கிலியில் நுழைந்து மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் பல உடல்நலக் கேடுகளை ஏற்படுத்துகின்றன என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆரோக்கியமான, வேதிப்பொருட்கள் இல்லாத உணவை வழங்குவது புது யுகத்தின் தேவையாகும். உலக சுகாதார நிறுவனம் 'ஒற்றை நலம்' (One Health) என்ற கருத்தைப் பிரகடனப்படுத்தி ஊக்குவித்து வருவதால், மண் நலத்தைக் காப்பதில் அங்கக வேளாண்மை அவசியமாகிறது. உலகளாவிய தேவை, விரிந்து வரும் உள்நாட்டு, வெளிநாட்டு சந்தைகளுக்கு ஏற்ப, அங்கக வேளாண் விளை பொருட்களை உற்பத்தி செய்து வழங்குவதற்குத் தேவையான பெரும் திறனை தமிழ்நாடு கொண்டுள்ளது. சுற்றுச்சூழலுக்குப் பாதுகாப்பான உணவினை வழங்கும் முறைக்கான தேவை, அங்கக வேளாண் கொள்கையை உருவாக்குவதற்கான அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது. அங்கக வேளாண் கொள்கையானது, தமிழ்நாட்டில் இரசாயனமற்ற அங்கக வேளாண்மையை உறுதி செய்யவும், தரம் உயர்த்தவும் உதவுவதோடு மக்களுக்குப் பாதுகாப்பான உணவை வழங்கவும் உதவும்.

## 8. நோக்கங்கள்

அங்கக வேளாண் கொள்கையானது வளர்ச்சி, நிலைத்தன்மை ஆகிய முக்கியமான பிரிவுகளின் கீழ் பின்வரும் நோக்கங்களை கொண்டுள்ளது:-

I மண் வளம், வேளாண் சூழலியல் மற்றும் பல்லுயிர்ப் பெருக்கத்தை பாதுகாத்தல் மற்றும் நிலைத்திருக்கச் செய்தல்.

II பாதுகாப்பான, ஆரோக்கியமான மற்றும் சுற்றுச் சூழலுக்கு உகந்த உணவை வழங்குதல்.

III அங்கக வேளாண்மை குறித்த விழிப்புணர்வை உருவாக்குதல், அங்கக வேளாண் நடைமுறைகளை விரிவாக்கம் செய்தல்.

IV அங்கக சான்றளிப்பு முறைகள், நச்சுத்தன்மை பகுப்பாய்வு நெறிமுறைகளை (Pesticide Residue analysis) வலுப்படுத்துதல்.

V பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் அல்லது பண்ணைக்கு அருகாமையில் உற்பத்தி செய்யப்படும் தொழு உரம், மண்புழு உரம் போன்ற இடு பொருட்களை ஊக்குவித்தல்.

VI சந்தை ஆலோசனைகள், சான்றிதழ் ஆலோசனைகளை வழங்குதல்.

VII. ஏற்றுமதியை ஊக்குவித்தல் ,விவசாயிகளின் வருவாயை அதிகரித்தல்.

VIII. அங்கக வேளாண்மையை கல்வி மற்றும் ஆராய்ச்சியில் சேர்த்தல்.

## 9. கொள்கை உத்திகள்

**9.1 அங்கக உத்திகள் மூலமும் வளங்களைப் பாதுகாப்பதை ஊக்குவிப்பதன் மூலமும் வேளாண் நிலைத்தன்மையை உறுதி செய்தல்:**

I அங்கக வேளாண்மையால் கலப்புப் பண்ணையம், ஒருங்கிணைந்த பண்ணையம் ஆகியவை ஊக்குவிக்கப்படும். ஒருங்கிணைந்த அங்கக வேளாண்மை முறை பரவலாக்கப்பட்டு, பருவப் சார்ந்த மாற்றுப்பயிர் சாகுபடி முறை பின்பற்றப்படும்.

II மண்வளம், உற்பத்தி ஆகியவற்றில் நிலைத்தன்மையைப் பெறுவதற்கு, கலப்பு, பல்லடுக்கு, ஊடுபயிர், பயறு வகைப்பயிர்களைக் கொண்டு பயிர் சுழற்சி மேற்கொள்ளுதல் ஆகிய சாகுபடி முறைகள் வலியுறுத்தப்படும்.

III பசுந்தாள் உரப்பயிர்கள், நிலப்போர்வை பயிர்கள் ஆகியவற்றின் சாகுபடி ஊக்குவிக்கப்படும். மானாவாரி சாகுபடி, தோட்டக்கலைப் பயிர்கள், நிரந்தர வேளாண்மை, வேளாண் காடுகள், பண்ணைக் காடுகள், பால் பண்ணை, மீன் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு போன்ற அனைத்து அங்கக அடிப்படையிலான செயல்பாடுகளையும் ஒருங்கிணைத்து பண்ணைக்குள் வளங்களை மறுசுழற்சி செய்வது ஊக்குவிக்கப்படும்.

IV. ஊட்டச்சத்துப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக சிறுதானியங்கள், பயறு வகைகள், காய்கறிகள் போன்ற ஊட்டச்சத்து மிக்க பயிர்களின் சாகுபடி ஊக்குவிக்கப்படும்.

V இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகளை வாங்குவதற்கான செலவைக் குறைப்பதற்காக பண்ணையில் உள்ள இடுபொருட்களைக் கொண்டு பஞ்சகவ்யம், ஜீவாமிர்தம், மண்புழு உரம் போன்றவற்றை சுயஉதவி குழுக்கள் (SHGs), உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் (FPOs) மூலம் பண்ணை அளவில் தயாரிப்பது ஊக்குவிக்கப்படும்.

VI. பாரம்பரிய விதைகள், அங்கக உத்திகள் ஆகியவற்றின் மூலம் சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் உதவி செய்யும் அங்கக விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக ஊக்கத்தொகை வழங்கப்படும். அங்கக விவசாயிகளுக்கு உயிர் உரங்கள், உயிரி இடுபொருட்கள் ஆகியவை மானிய விலையில் விநியோகிக்கப்படும்.

VII அங்கக வேளாண்மையை ஆதரிக்கும் வகையில் பயிர்க் கடன் வழங்குதல் ஊக்குவிக்கப்படும்.

VIII எதிர்பாராத நிகழ்வுகள் / இயற்கைப் பேரிடர்களால் ஏற்படும் பயிர் இழப்பு / சேதங்களுக்கு பயிர்க் காப்பீடு மூலம் உதவி வழங்கப்படும்.

IX உயிர் உரங்கள் (Biofertilizers), உயிரி பூச்சிக்கொல்லிகள் (Biopesticides), உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் (Bio control Agents) ஆகியவற்றின் உற்பத்தி ஊக்குவிக்கப்பட்டு அதற்கான உதவிகள் வழங்கப்படும்.

X. திறன் வாய்ந்த மேலாண்மை முறைகள் மூலம் மண்வளம், நீராதாரங்களைப் பாதுகாத்தல் ஊக்குவிக்கப்படும்.

XI புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்களை அங்கக பண்ணைகளில் பயன்படுத்துவது ஊக்குவிக்கப்படும் (சூரிய ஆற்றல், சாண எரி வாயு போன்றவை).

XII அனைத்து முக்கியப் பயிர்களின் பாரம்பரிய இரகங்களைப் பாதுகாப்பதன் மூலம் மாநிலத்தின் பல்லுயிர்ப் பெருக்கம் (Biodiversity) பாதுகாக்கப்படும். மாடுகள், ஆடுகள், கோழிகளின் நாட்டு இனங்கள் பாதுகாத்து பேணப்படும்.

XIII. பண்ணைக்கு வெளியே தயாரிக்கப்படும் இடுபொருட்களின் தர சோதனை முறைகள் வலுப்படுத்தப்படும்.

## 9.2 அங்கக சான்றளிப்பினை வலுப்படுத்துதல்

I பங்களிப்பு உறுதித் திட்டம் (PGS), தேசிய அங்கக உற்பத்தித் திட்டம் (NPOP) ஆகியவற்றின் கீழ் சான்றிதழைப் பெறுவதற்கான வழிகாட்டுதல்களை, அங்கக சான்றளிப்பு அமைப்பு விவசாயிகளுக்கு வழங்கும். உள்நாட்டுத் தேவையினைப் பூர்த்தி செய்ய பங்களிப்பு உறுதித் திட்டம் ஊக்குவிக்கப்படும்.

II சான்றிதழ் நடைமுறையை எளிதாக்க ஒற்றைச் சாளர முறை செயல்படுத்தப்படும். விவசாயிகளின் பதிவு, சான்றளிப்பு, விரிவான தரவுதளத்தைப் பராமரித்தல் ஆகியவற்றை இணையதளம் மூலம் மேற்கொள்வது ஊக்குவிக்கப்படும்.

III தரப்பரிசோதனைகள், சான்றளிப்பு ஆகியவற்றுக்கான தரநிலைகள் ஏற்படுத்தப்படும்.

IV அங்ககசான்றளிப்புப் பணியைத் துரிதப்படுத்த, போதுமான தொழில்நுட்பப் பணியாளர்களைக் கொண்டு, மாவட்ட அளவிலான சான்றளிப்பு அமைப்பு பலப்படுத்தப்படும்.

V சோதனை மற்றும் அளவுத்திருத்த ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார வாரியத்தின் (NABL) தரநிலைகள், அங்கீகாரத்தின்படி மாநிலத்தில் அங்கக உற்பத்திகளின் தரத்தை பரிசோதிப்பதற்காக எஞ்சிய பூச்சிக்கொல்லி பகுப்பு ஆய்வகங்களை (Pesticide Residue Analysis Laboratories) நிறுவுதல் ஊக்குவிக்கப்படும்.

VI கால்நடை வளர்ப்பு, கோழிவளர்ப்பு, தேனீ வளர்ப்பு, மீன் வளர்ப்பு, காளான் வளர்ப்பு, பசுமைக்குடில் சாகுபடி ஆகியவற்றின் உற்பத்திப் பொருட்களுக்கும்தமிழ்நாடு அங்கக சான்றளிப்புத் துறையின் (TNOCD) சான்றளிப்பு வழங்கப்படும்.

## 9.3 குழு அணுகுமுறைக்கு முன்னுரிமை

I விழிப்புணர்வு, பயிற்சி, வழகாட்டுதல் ஆகியவற்றில், சுய உதவிக் குழுக்கள் (SHGs) / உழவர் ஆர்வலர் குழுக்கள் (FIGs), உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் (FPOs), உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் FPCs), விவசாயிகள் கூட்டமைப்புகள், இணைப்பு விவசாயிகள் போன்றவை கொண்ட குழு அணுகு முறை ஊக்குவிக்கப்படும்.

II மாநிலத்தில் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ள மானாவாரி விவசாயக் குழுக்களை அங்கக வேளாண்மைக் குழுக்களாக மேம்படுத்த கவனம் செலுத்தப்படும்.

III ஆர்வமுள்ள உழவர் ஆர்வலர்குழுக்கள் (FIG), உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் (FPG) கண்டறியப்பட்டு கிராம அளவில் இயற்கை வேளாண்மையை மேம்படுத்த அவர்களுக்கு உரிய உதவிகள் வழங்கப்படும்.

IV பயிர் திட்டமிடல், பண்ணை அளவிலான இடுபொருட்களின் உற்பத்தி, அங்கக விளைபொருட்களை சேகரித்தல், தரம் பிரித்தல், பதப்படுத்துதல், சிப்பமிடல், போக்குவரத்து, சந்தைப்படுத்துதல் ஆகிய பொறுப்புகள் குழுக்களிடம் ஒப்படைக்கப்படும்.

V அங்கக உழவர்களுக்கு உரிய விலை, அதிகவருவாய் ஆகியவை கிடைக்கப் பெறுவதற்காக குழுக்களுக்குள் கூட்டு சந்தைப்படுத்தலும் ஊக்குவிக்கப்படும்.

VI குழுக்களுக்குள் தயாரிக்கப்பட்ட பண்ணை இடுபொருட்கள், விதைகள், நடவுப்பொருட்கள் உபகரணங்கள் ஆகியவற்றுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படுவதுடன் குழுக்களுக்குள் அங்கக இடுபொருட்கள் பகிர்ந்து கொள்வது ஊக்குவிக்கப்படும்.

VII புவியியல் தகவல் அமைப்பு (GIS) மற்றும் தொலைஉணர்வு (Remote Sensing) அடிப்படையிலான கிராம புவிசார்குறியீடு போன்ற நவீன தொழில்நுட்பங்கள் வாயிலாக குழு அடிப்படையிலான வேளாண் மேலாண்மை அமைப்பு பலப்படுத்தப்படும்.

VIII தனியார் நிறுவனங்கள், தமிழ்நாடு விதை மேம்பாட்டு முகமை (TANSEDA), தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை (TANHODA) வாயிலாக பாரம்பரிய அங்கக விதைகள், இடுபொருட்கள், நடவுப்பொருட்களின் பெருமளவிலான உற்பத்தி ஊக்குவிக்கப்படும்.

IX ஏற்றுமதி நோக்கங்களுக்காக, குழுக்கள் மூலம் விநியோகத் தொடர்கள் ஏற்படுத்தப்படும். சாத்தியமுள்ள மாவட்டங்களில் தோட்டக்கலைப் பயிர்கள் உட்பட பயிர் அடிப்படையிலான குழுக்கள் உருவாக்கப்படும்.

X அங்ககவேளாண் குழுக்களை ஒருங்கிணைத்து அங்கக வேளாண் மண்டலங்கள் உருவாக்கப்படும். கிராமப்புர இளைஞர்கள், பண்ணை மகளிர், மாணவர்களுக்கு அங்கவேளாண்மை குறித்த பயிற்சியளிக்கப்படும் / விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.



XI தானிய வங்கி, உயிர் உரம் / பண்ணைக்கழிவு உரக்கூடங்கள், பயிர்க்கழிவுகளைத் தூளாக்கும் இயந்திரம், அறுவடை இயந்திரம், தீவன வங்கி போன்ற பொதுவான வளங்கள் / உடைமைகளை வட்டார அளவில் உருவாக்கி மேம்படுத்த, திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல் படுத்தப்படும்.

## 9.4 அங்கக வேளாண்மை பற்றிய ஆராய்ச்சி, மேம்பாடு, கல்வி

I அனைத்து முக்கிய பயிர்களுக்கான அங்ககவேளாண் உத்திகளை மேம்படுத்துவதற்காக வேளாண் ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்களால் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். இதனுடன், நீடித்த, நிலையான, கூடுதல் வருவாய் ஈட்டும் வகையிலான முக்கிய அங்கக வேளாண்மைத் தொகுதிகள் உருவாக்கப்படும்.

II பல்வேறு பாரம்பரிய அங்கக மேலாண்மை நடைமுறைகளை அறிவியல் பூர்வமாக சரிபார்த்தல், அங்கக வேளாண்மையின் பல்வேறு அம்சங்கள் பற்றிய உள்நாட்டு தொழில்நுட்பத் தகவல்களை (Indigenous Traditional Knowledge-ITKs) ஆவணப்படுத்துதல் ஆகிய பணிகள் வேளாண் ஆராய்ச்சி நிறுவனங்களிலும் பல்கலைக் கழகங்களிலும் மேற்கொள்ளப்படும்.

III தாவர இனப்பெருக்கத் தொழில்நுட்பங்கள் மூலம் அங்கக சாகுபடிக்கு ஏற்ற புதிய இரகங்கள் குறித்து வேளாண் ஆராய்ச்சி நிலையங்களிலும் பல்கலைக்கழகங்களிலும் தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

IV வேளாண் அறிவியல் நிலையங்கள் (KVK), ஏனைய முகமைகள், இணைப்பு விவசாயிகள் வாயிலாகவும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் (ATMA) கீழும் ஒருங்கிணைந்த அங்கக வேளாண்மைக்கான வயல்வெளிப் பள்ளிகள் நடத்தப்படும்.

V அங்கக வேளாண்மையை ஆதரிப்பதற்காக, உயிர் உரங்கள், மண்புழு உரங்கள், உயிரி பூச்சிக்கொல்லிகள், உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் ஆகியவற்றின் பண்ணை அளவிலான உற்பத்தி, மதிப்பு கூட்டப்பட்ட அங்கக பொருட்களின் உற்பத்தி ஒருங்கிணைந்த வேளாண்மை ஆகியவை குறித்து உழவர்களுக்கு சான்றிதழ் படிப்பு, பயிற்சி போன்ற மனிதவள மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிக்கப்படும்.

VI அங்ககபணியில் ஈடுபட்டுள்ள முன்களப் பணியாளர்களுக்கு, புகழ்பெற்ற முன்னோடி நிறுவனங்கள் வாயிலாக ஆற்றல் மேம்பாடு, பட்டறிவுப் பயணம், திறன் வளர்ப்புப் பயிற்சி ஆகியவை வழங்கப்படும்.

VII குழந்தைகளிடையே அங்கக வேளாண்மை, பல்லுயிர் பாதுகாப்பு குறித்த ஆர்வத்தை உருவாக்கவும் அவர்களின் வீடுகளிலும் அதனை அவர்கள் தொடரவும், தமிழ்நாட்டில் வாய்ப்புள்ள பகுதிகளில் உள்ள பள்ளிகளில் அங்கக காய்கறித்தோட்டங்கள், பழத்தோட்டங்களை அமைப்பதற்கான முறை உருவாக்கப்படும். இதற்கென, அரசு நிறுவனங்கள் மூலம் தேவையான உதவித் திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்படலாம்.

VIII வாய்ப்புள்ள வேளாண் கல்லூரிகள், பல்கலைக் கழகங்களின் வளாகங்களில் விதை வங்கிகள், விதைப் பண்ணைகளைப் பராமரிப்பதன் மூலம்நல்ல தரமான விதைகளை உற்பத்தி செய்து அருகிலுள்ள பகுதிகளில் பயன்படுத்துமாறு வழங்குவது ஊக்குவிக்கப்படும்.

## 9.5 அங்கக வேளாண்மையை மேம்படுத்துவதற்கான நிறுவனங்களை வலுப்படுத்துதல்

I. வேளாண்மை, தோட்டக்கலை, அங்கக சான்றளிப்பு ஆகிய துறைகளிலுள்ள அங்ககப்பிரிவுகள் திறம்பட ஒன்றிணைக்கப்பட்டு, அங்கக வேளாண்மையை ஊக்குவிப்பதில் ஈடுபடுத்தப்படும்.

II. அங்கக வேளாண்மையின் கீழ் கொண்டு வருவதற்கு சாத்தியமான பகுதிகளை கண்டறிவதற்கு அனைத்து மாவட்டங்களிலும் அடிப்படைக் கணக்கெடுப்பு நடத்தப்படும். உற்பத்திப் பொருள் அடிப்படையிலான குழுக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

III. அனைத்துப் பிரிவினரையும் குறிப்பாக, பெண்கள், பழங்குடியினரைச் சென்றடையும் வகையில் அங்கக வேளாண்மை குறித்த துண்டுப் பிரசுரங்கள், ஆய்வு முடிவுகள், சிறந்த நடைமுறைகள், வெற்றிக்கதைகள், காணொலிப் படங்கள், சுவரொட்டிகள், ஏனைய விழிப்புணர்வுப் பொருட்கள் ஆகியவை தயாரிக்கப்படும்.

IV. அங்கக வேளாண்மையின் நன்மைகளை பொதுமக்களிடையே கொண்டு சேர்ப்பதற்கு வலைதளங்கள், சமூக ஊடகங்கள் ஆகியவை பயன்படுத்தப்படும்.

V. ஒவ்வொரு மாவட்டத்திலும் குறிப்பிட்ட கால இடைவெளியில் அங்கக உணவுத் திருவிழாக்கள் நடத்தப்படும்.

VI. அங்ககவேளாண்மையை மேற்கொள்ள விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் பொது தனியார் கூட்டாண்மை முறை (Public-Private Partnerships) ஊக்குவிக்கப்படும்.

VII. முற்றிலும் அங்கக வழியிலான நகர்ப்புர வேளாண்மை, மாடித்தோட்டம், ஊட்டச்சத்துத் தோட்டம் ஆகியவை ஊக்குவிக்கப்பட்டு பொதுமக்களிடையே எடுத்துசெல்லப்படும்.

VIII. அங்கக வேளாண் ஆர்வலர்கள், ஏற்றுமதியாளர்கள், ஊக்குவிப்பாளர்கள் ஆகியோர் அங்கக வேளாண்மையை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

IX. அனைத்து பயிர்களின் பாரம்பரிய நாட்டு விதைகளைப் பாதுகாக்க மாநில அளவிலான ஒரு மரபணு வங்கி நிறுவப்படும்.

X. அங்கக வேளாண் நடைமுறைகள், சான்றளிப்பு, சந்தைப்படுத்துதல் ஆகியவை குறித்து அங்கக விவசாயிகளுக்கு வழிகாட்டுவதற்கென தனியாக அங்கக வேளாண்மை உதவி மையம் உருவாக்கப்படும்.

XI. முற்போக்கான, முன்னணி அங்கக விவசாயிகளின் அனுபவங்கள் ஆவணப்படுத்தப்பட்டு பொது ஊடகங்கள் மூலம் பரப்பப்படும்.

XII. வட்டார அளவில் மாதிரி அங்ககப் பண்ணைகள் உருவாக்கப்பட்டு அரசுப்பண்ணைகளிலும் தனியார் பண்ணைகளிலும் பராமரிக்கப்படும்.

XIII. அங்கக இடுபொருள் உற்பத்தியாளர்கள், உணவு பதப்படுத்துபவர்கள், அங்ககப் பொருள் வர்த்தகர்கள் ஆகியோருக்கு வங்கிகள், நபார்டு போன்ற நிறுவனங்கள் வாயிலாக நிதியுதவி அளிக்கப்படும்.



XIV. வெற்றிகரமான அங்கக விவசாயிகளின் வெற்றிக் கதைகள் சரிபார்க்கப்பட்டு, அவை பத்திரிகைகள் மற்றும் பருவ இதழ்களில் தொடர்ந்து வெளியிடப்படும்.

XV. வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை (A T M A), பிற மாநில-மத்திய திட்டங்களுடன் ஒன்றிணைக்கப்பட்டு ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

XVI. அங்கக சான்றளிப்புத் துறையின் இணையதளமும் தொடர்புடைய பிற இணையதளங்களும் வலுவூட்டப்படும்.

XVII. அங்கக விளைபொருட்களின் தீவிர கண்காணிப்பு / முறைப்படுத்துதல் தொடங்கப்படும்.

## 9.6. அதிக வாய்ப்புள்ள பயிர்கள், அதிக வாய்ப்புள்ள மாவட்டங்களில் கவனம் செலுத்துதல்

I ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தில் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் குறிப்பிட்ட வேளாண் பயிர்கள், தோட்டக்கலைப் பயிர்கள் மீது தொகுப்பு அணுகு முறையில் கவனம் செலுத்தப்படும்.

II குறிப்பிட்ட பயிர்களை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள விவசாயிகள் மாவட்டங்களில் அடையாளம் காணப்பட்டு, அவர்கள் அங்கக வேளாண்மைக்கு ஊக்குவிக்கப்படுவர்.

III குறிப்பிட்ட அங்கக வேளாண் பொருளின் உயர்ந்த விளைச்சலை சீரான தரத்துடன் எய்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

IV இயல்பாகவே அங்கக சாகுபடி நிகழும் பகுதிகள், மானாவாரிப் பகுதிகள் மீது கவனம் செலுத்த ஏதுவாக முதற்கட்டமாக, வாய்ப்புகள், நிலப்பரப்பு ஆகியவற்றின் அடிப்படையில் சில மாவட்டங்கள் தேர்வு செய்யப்படும். மீதமுள்ள மாவட்டங்கள் படிப்படியாக தேர்வு செய்யப்படும்.

### 9.7. சந்தை இணைப்புகள், ஏற்றுமதி வாய்ப்புகளை உருவாக்குதல்:

I இணையதளம் வாயிலாகவும் நேரடியான அமைப்புகள் வாயிலாகவும் உரிய நேரத்தில் சந்தை நுண்ணறிவினை வழங்குவதன் மூலம் விவசாயிகள் அதிக பயன் பெறுவார்கள்.

II வெற்றிகரமான, நம்பகமான அங்கக உற்பத்திப் பொருள் சேகரிப்போரை ஊக்குவிப்பதன் வாயிலாக சந்தை வாய்ப்புகள் விவசாயிகளின் பண்ணை அளவில் கிடைக்கப்பெறும்.

III அங்ககப் பொருட்கள் மீதான ஏற்றுமதிக் கொள்கைகள், நடைமுறைகள் குறித்து உழவர்களுக்கும் அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படும்.

IV மதிப்புக் கூட்டுதல் மையங்கள், பதப்படுத்துதல் மையங்களோடு அங்ககத் தொகுப்புகளை இணைப்பது ஊக்குவிக்கப்படும்

V மாநில அளவிலான அங்ககக் கண்காட்சிகள் தொடர்ந்து நடத்தப்படும்.

VI மாநகரங்கள், நகரங்களில் அங்கக விற்பனை நிலையங்களை அமைப்பதற்குச் சாத்தியமான திட்டங்களுக்கு, நபார்டு வங்கி போன்ற பொது நிதியுதவி முகமைகள் மூலம் கடன் பெற வழி வகை செய்யப்படும்.

VII மின் -வணிகம், இணையதளம்/வலை விவரப் பக்கம், தேசிய மின்னணு வேளாண் சந்தை (eNAM), கைபேசி செயலிகள் - சந்தைத் தளங்கள், இணையவழிச் சந்தை போன்ற விளம்பர, ஊக்குவிப்பு நடவடிக்கைகள் வாயிலாக அங்ககத் தயாரிப்புகளைச் சந்தைப் படுத்துவதற்கான வாய்ப்புகளும் ஆதரவு அமைப்பும் உருவாக்கப்படும்.

VIII நுகர்வோர் தேவைக்கு ஏற்றவாறான வெற்றிகரமான மாதிரிகள் பெரிய அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்படும். பின்னோக்கிய மற்றும் முன்னோக்கிய இணைப்பு உத்திகள் விநியோகத் தொடரில் ஒன்றிணைக்கப்படும்.

IX மாநிலப் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பிற நிறுவனங்கள் ஆகியவற்றில் சாத்தியமான அங்ககத் திட்டங்களைப் பரப்புவதற்கான வணிக உள்வளர்மையங்கள்(Incubation Centres)நிறுவப்படும்.

X அங்ககப் பொருட்களின் மூலத்தை அறிதல் (Traceability), அவற்றைச் சந்தைப்படுத்துதல் ஆகியவற்றில் மேம்பட்ட நிலைப்பதிவு (Block Chain), மின்னணுப் பொருட்களின் இணையம்(Internet of Things) மற்றும் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) தொழில் நுட்பங்கள் உருவாக்கப்பட்டுப் பயன்படுத்தப்படும்.





## 10. குழுக்களை அமைத்தல்

### I உயர்நிலைக் குழு:

அங்கக வேளாண்மைக் கொள்கை, அதன் நிலை ஆகியவை குறித்து சீராய்வு செய்வதற்காக அரசு தலைமைச் செயலர் அவர்கள் தலைமையில், அரசு அலுவலர்கள், பிற நிறுவனங்களின் அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்ட உயர்நிலைக் குழு ஒன்று அமைக்கப்படும்.

### II வழிகாட்டுதல் குழு:

அங்கக வேளாண்மைக் கொள்கையை செயல்படுத்துவதையும், திட்டங்களை இறுதி செய்வதையும் கண்காணிக்க, வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலர், வேளாண்மை-உழவர் நலத்துறை அவர்கள் தலைமையில் வழிகாட்டுதல் குழு ஒன்று அமைக்கப்படும்.

### III மாவட்ட அளவிலான குழு:

மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் பல்வேறு துறை மற்றும் நிறுவனங்களின் அலுவலைகளை உறுப்பினர்களாகக் கொண்ட மாவட்ட அளவிலான குழு அமைக்கப்படும்.

## 11. நிதிச் சுமை/பொறுப்பு

வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் வணிகம், வேளாண்மைப் பொறியியல், கால்நடை பராமரிப்பு, மீன்வளம், கதர் மற்றும் துணிநூல் போன்ற அனைத்துத் துறைகளின் தொடர்புடைய மத்திய, மாநில அரசுத் திட்டங்களை ஒருங்கிணைத்து, ஒருங்கிணைந்த அணுகுமுறையில் இக்கொள்கை செயல்படுத்தப்படும்.

## 12. அங்கக வேளாண்மைக் கொள்கைக்கான காலவரம்பு

இக்கொள்கை, இது குறித்த அரசாணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து செயலுக்கு வரும். ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு இக்கொள்கை சீராய்வு செய்யப்படும்.

## இணைப்பு

### அதிக வாய்ப்புள்ள பயிர்கள் அதிக வாய்ப்புள்ள மாவட்டங்களில் கவனம் செலுத்துதல்

| வ.எண் | பயிர்கள் | அதிக வாய்ப்புள்ள மாவட்டங்கள் |
|---|---|---|
| 1 | பாரம்பரிய நெல் வகைகள் | புதுக்கோட்டை, திருவாரூர், நாகப்பட்டினம், திருச்சி, ஈரோடு, கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, மயிலாடுதுறை, திருவள்ளூர் |
| 2 | கரும்பு | ஈரோடு, கடலூர், நாமக்கல், பெரம்பலூர், திருச்சி, கள்ளக்குறிச்சி |
| 3 | சிறுதானியங்கள் | தருமபுரி, வேலூர், திருவண்ணாமலை, திண்டுக்கல், சேலம், மதுரை, தூத்துக்குடி, கரூர் |
| 4 | பயறு வகைகள் | விழுப்புரம், சிவகங்கை, கடலூர், கரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காஞ்சிபுரம் |
| 5 | நிலக்கடலை | திருவண்ணாமலை, விழுப்புரம், ராணிப்பேட்டை, வேலூர், நாமக்கல்,சிவகங்கை, செங்கல்பட்டு, திருப்பத்தூர் |
| 6 | தேங்காய் | கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு |
| 7 | மாம்பழம் | கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், திண்டுக்கல் |
| 8 | வாழைப்பழம் | கன்னியாகுமரி, திண்டுக்கல், ஈரோடு, கரூர், கோயம்புத்தூர், தூத்துக்குடி |
| 9 | காபி | கோயம்புத்தூர் (ஆனைமலை), நாமக்கல் (கொல்லிமலை), திண்டுக்கல் (கொடைக்கானல்), நீலகிரி, தேனி |
| 10 | பருத்தி | ராமநாதபுரம், மதுரை, தேனி, திண்டுக்கல், தூத்துக்குடி, விருதுநகர், தென்காசி |
| 11 | மிளகாய் | ராமநாதபுரம், தூத்துக்குடி, சிவகங்கை |
| 12 | மஞ்சள் | ஈரோடு, கோயம்புத்தூர், நாமக்கல் |
| 13 | தேயிலை | நீலகிரி, கோயம்புத்தூர் (வால்பாறை) |
| 14 | காய்கறிகள் | தேனி, கோயம்புத்தூர், ஈரோடு, கிருஷ்ணகிரி, சேலம் |
| 15 | வெங்காயம் | பெரம்பலூர், அரியலூர் |
| 16 | மருத்துவப் பயிர்கள் | திண்டுக்கல், தேனி |
| 17 | மிளகு | கோயம்புத்தூர், கன்னியாகுமரி, நாமக்கல், திருவண்ணாமலை |
| 18 | முருங்கைக்காய் | ஈரோடு, மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, தேனி |
| 19 | நறுமணப் பொருட்கள் | கன்னியாகுமரி, நாமக்கல், ஈரோடு, தேனி, திண்டுக்கல், கோயம்புத்தூர் |







புத்தகத்தைப் பார்க்க QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்

மின்னணு புத்தகம்


## வேளாண்மை-உழவர் நலத்துறை

முதல் தளம், - தலைமைச் செயலகம் , சென்னை - 600 009, தமிழ்நாடு.
தொலைபேசி - 044 2567 4482, மின்னஞ்சல் - agrisec@tn.gov.in